நிதி கல்வி மின்னூல்



கேள். தடு. பகிர்.

செப்டம்பர் 2026 அன்று புதுப்பிக்கப்பட்டது

உள்ளடக்கம்

அண்மைய நிதி மோசடிகள் 3

சட்ட அமலாக்க அமைப்புகளின் அதிகார வரம்பு 13

நிதி மோசடிகளுக்கு இரையாகாமல் தவிர்க்க 15

உடனடியாக புகார் செய்யுங்கள் 18



அண்மைய நிதி மோசடிகள்



உண்மையற்ற முதலீடுகளில்
ஈடுபடாதீர்கள்



அமோகமான லாபத்திற்கு வாக்குறுதி அளிக்கும் முதலீட்டுத் திட்டங்களில் மாட்டிக்கொள்ளாதீர்கள்

தந்திரங்கள்:

குறுகிய காலவரையறைக்கு உட்பட்ட சலுகைகள்

மதத்தைப் பயன்படுத்தி உணர்வுகளுடன் விளையாடும் செயல்


சட்ட அமலாக்க நிறுவனத்தின் பெயர் மற்றும் சின்னங்களைத் தவறாகப் பயன்படுத்துதல்

எந்த இழப்பும் இல்லை என கூறுவது

மேலோட்டமாகப் பார்க்கையில் கவர்ச்சியாக இருக்கும், ஆனால் உண்மையில் மோசமான முதலீட்டு திட்டங்கள்

அமோகமான லாபம்





தொடர்பற்ற வங்கிக் கணக்குகளுக்கு கிடையே பண பரிமாற்றங்கள்

AMARAN SCAM
Soal. Sekat. Sebar.

1. முதலீடு செய்வதற்கு முன் சரிபார்க்கவும்
2. கவர்ச்சிகரமான சலுகைகளை நம்பாதீர்கள்

குறிப்புக்கான தளங்கள்:

முதலீட்டாளர்களுக்கான எச்சரிக்கைப் பட்டியல்
https://www.sc.com.my/investor-alert-list

நிதி நுகர்வோருக்கான எச்சரிக்கை பட்டியல்
https://www.bnm.gov.my/financial-consumer-alert-list

நிதி மோசடிகளுக்கான எச்சரிக்கை
https://www.bnm.gov.my/financial-fraud-alerts

பினாமி வங்கிக் கணக்குகளைச் சரிபார்க்கும் தளம்
https://semakmule.rmp.gov.my/

சட்டவிரோத வெளிநாட்டு நாணய வர்த்தகத்தில் (FOREX) ஈடுபடாதீர்கள்



அனைத்து **வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகளும்** மலேசிய மத்திய வங்கியால் **அனுமதிக்கப்பட்ட நிதி நிறுவனங்களின்** வாயிலாக மட்டுமே மேற்கொள்ள வேண்டும்

தந்திரங்கள்:


இலவச FOREX வர்த்தக பயிற்சி வழங்கப்படுவது


குறுகிய நேரத்தில் அமோகமான லாபம்

சட்ட அமலாக்க நிறுவனத்தின் பெயர் மற்றும் சின்னங்களைத் தவறாகப் பயன்படுத்துதல்

முதலீட்டு திட்டம் உண்மையானது என்று மக்களை நம்ப வைக்கும் போலித்தளங்கள்

உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அதிகார நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட தாகக் கூறப்படும் போலியான முதலீட்டுத் திட்டங்கள்





தொடர்பற்ற வங்கிக் கணக்குகளுக் கிடையே பண பரிமாற்றங்கள்

மலேசிய மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனங்கள் மூலமாக நடைபெறாத வெளிநாட்டு நாணய (FOREX) பரிவர்த்தனைகள் சட்டவிரோதமானவையாகும்

AMARAN SCAM
Soal, Sekat, Sebar.

1. முதலீடு செய்வதற்கு முன் சரிபார்க்கவும்
2. மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும் சலுகைகளை நம்பாதீர்கள்
3. முதலீடு செய்வதற்கு முன் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்தைக் கலந்தாலோசிக்கவும்

குறிப்புக்கான தளங்கள்:

முதலீட்டாளர்களுக்கான எச்சரிக்கைப் பட்டியல்
https://www.sc.com.my/investor-alert-list

நிதி நுகர்வோருக்கான எச்சரிக்கை பட்டியல்
https://www.bnm.gov.my/financial-consumer-alert-list

நிதி மோசடிகளுக்கான எச்சரிக்கை
https://www.bnm.gov.my/financial-fraud-alerts

பினாமி வங்கிக் கணக்குகளைச் சரிபார்க்கும் தளம்
https://semakmule.rmp.gov.my/

வங்கி கணக்குகள் மற்றும் அட்டைகளை வாடகைக்கு விடுவதிலிருந்து விலகுங்கள்



பினாமி வங்கிக் கணக்கு என்பது உங்கள் வங்கி கணக்கு சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக வேறு நபரால் தவறாக பயன்படுத்தப்படுவதைக் குறிக்கிறது

தந்திரங்கள்:

உங்கள் கணக்கிற்கு அணுகலை வழங்கினால், அதிக லாபகரமான வாடகைத் தொகை/ கமிஷன் வழங்குவதாக வாக்குறுதி



வங்கி கணக்கை ஒப்படைக்கும் நிபந்தனையுடன், எளிய வேலை மற்றும் உயர்ந்த ஊதியம் வழங்குவதாக வாக்குறுதி அளித்தல்



கமிஷன் பெற பணத்தை மற்றவர் கணக்கில் செலுத்தச் சொல்லப்படுவது

குற்றம் நிரூபிக்கப்பட்டால்

அதிகபட்சமாக 7 ஆண்டு சிறை தண்டனை அல்லது RM100,000 அபராதம் அல்லது இரண்டும்

வங்கி கணக்கை வாடகைக்கு விடுவதால் ஏற்படும் விளைவுகள்

- SemakMule தளத்தில் 'பினாமி கணக்கு' என கருப்புப்பட்டியலிடப்படுவீர்கள்
- வங்கி கணக்கைத் திறப்பதற்கும், பராமரிப்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்
- வேலை கிடைக்க கடினமாகும்
- வணிகம் நடத்துவதில் சிரமம்
- நிதி உதவிகளைப் பெற கடினம்

AMARAN SCAM
Soal. Sekat. Sebar.

1. உங்கள் வங்கி கணக்கு அல்லது ஏ.டி.எம் அட்டையை மற்றவரிடம் பகிர வேண்டாம்
2. உங்கள் வங்கி கணக்கின் பரிவர்த்தனைகளை எப்போதும் கண்காணிக்கவும்
3. பெறுநரின் கணக்கை SemakMule தளத்தில் சரிபார்க்கவும் https://semakmule.rmp.gov.my/
4. நீங்கள் பாதிக்கப்பட்டால் உடனடியாக வங்கியைத் தொடர்புகொள்ளவும்


“.APK” மற்றும் ‘malware’ போன்ற பயன்பாடுகளைப் பதிவிறக்கம் செய்ய வேண்டாம்



அதிகாரப்பூர்வமற்ற மூலங்களில் இருந்து அபாயகரமான மென்பொருள் அல்லது பயன்பாடுகளைப் பதிவிறக்கம் செய்வது, உங்கள் கைப்பேசியில் “malware” (தீங்கு விளைவிக்கும் மென்பொருள்) நுழைவதை அனுமதிக்கக்கூடும்

தந்திரங்கள்:

- திருமண அழைப்பிதழ்
- புத்தாண்டு நாள்காட்டி
- வீடு சுத்தம் செய்யும் சேவை



1. அறிமுகமான நபராக ஆள்மாறாட்டம் அல்லது விளம்பரம் மூலம் பாசாங்கு செய்தல்
2. .APK பதிவிறக்க இணைப்பு வழங்கப்படுவது
3. உங்கள் கைப்பேசியில் அந்த செயலியைப் பதிவிறக்கம் செய்வதற்கான கோரிக்கைகள்
4. கைப்பேசியை அணுகுவதற்கு செயலி அனுமதி கேட்கும்
5. உங்கள் கைப்பேசி ஊடுருவலுக்கு உள்ளாகியிருக்கலாம் (Hacked)

அதிகாரமற்ற பயன்பாடுகளைப் பதிவிறக்கம் செய்வதன் விளைவுகள்:

1. உங்கள் கைப்பேசி ‘hack’ செய்யப்படலாம்
2. உங்கள் கைப்பேசி கண்காணிக்கப்படலாம்
3. மோசடி நபர்கள் உங்கள் இருப்பிடத்தைத் இருப்பிடத்தைக் கண்டறியக்கூடும்.
4. தனிப்பட்ட தகவல்கள் திருடப்படலாம்

AMARAN SCAM
Soal. Sekat. Sebar.

1. அதிகாரப்பூர்வ தளங்களில் இருந்து மட்டுமே பயன்பாட்டைப் பதிவிறக்கம் செய்யுங்கள்

(உதாரணங்கள்: Google Play, Apple App Store, Huawei AppGallery)

2. வங்கி இணையதளங்கள் அதிகாரப்பூர்வமானவை என்பதை உறுதிசெய்யவும்
3. மூன்றாம் நபர்கள் பகிரும் சட்டவிரோத இணைய இணைப்புகளைத் திறக்க வேண்டாம்



வேலை வாய்ப்பு மோசடியில் சிக்கிக்கொள்ளாதீர்கள்

கவர்ச்சிகரமான சம்பளம் என்று வாக்குறுதி அளிக்கும் மோசடி வேலை வாய்ப்பு விளம்பரங்கள்.




தந்திரங்கள்:

சமூக வலைத்தளம் அல்லது குறுஞ்செய்தி வாயிலாக வேலை வாய்ப்பு வழங்கப்படுவது

உயர் சம்பளம்



நேர்முகத் தேர்வு கிடையாது



மனித வள பிரதிநிதி போல நடிக்கும் மோசடிக்காரர்கள்

எளிய வேலை ஒதுக்கீடு

எளிதான வேலைக்கு அதிக சம்பளம் வழங்குவதாக வாக்குறுதி அளிக்கும் நிறுவனத்தின் வேலைவாய்ப்பு பிரதிநிதியாக நடித்து மோசடி செய்பவரின் உதாரணம்.

1. இயல்பாக வேலை வழங்கப்படுகிறது
2. வேலைக்காக முன்பணம் செலுத்தக் கோரிக்கை
3. வேலை உறுதிப்படுத்தும் வகையில் தனிப்பட்ட வங்கித் தகவல்களை பகிருமாறு கேட்கப்படுகிறது
4. சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் வங்கிக் கணக்கை பயன்படுத்துதல்
5. அவ்வங்கிக் கணக்கு பினாமி கணக்கு (‘mule account’) எனப் பட்டியலிடப்படுகிறது

AMARAN SCAM
Scan. Sekat. Sebar.

1. உங்கள் வங்கி கணக்கைப் பகிர வேண்டாம்
2. முன்பணம், கடவுச்சீட்டு/’passport’ விடுவிப்பு போன்ற காரணங்களுக்காக பணம் அனுப்ப வேண்டாம்
3. கவர்ச்சிகரமான சலுகைகளை நம்பாதீர்கள்




போலி கடன் மோசடியில் ஈடுபடாதீர்கள்




கடன் வழங்கும் நிறுவனங்களின் அடையாளம் மற்றும் நம்பகத்தன்மையை தவறாகப் பயன்படுத்தி போலி கடன்கள் வழங்கும் மோசடி கும்பல்கள்

தந்திரங்கள்:

- சமூக வலைத்தளம் அல்லது குறுஞ்செய்தி வாயிலாக வேலை வாய்ப்பு வழங்கப்படுவது
- '24 மணி நேரத்திற்குள் உத்தரவாதமான அனுமதி', 'கறுப்புப் பட்டியலில் இருந்தாலும் தகுதி உண்டு'
- சட்டபூர்வ கடன் நிறுவன பிரதிநிதி போல நடித்து உத்திரவாத அட்டை வழங்குவது
- கைப்பேசி அல்லது குறுஞ்செய்தி செயலிகளின் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளப்படுவது
- 'வரி கட்டணம்', 'காப்பீடு' என்று கூறி பணம் கேட்டல் அல்லது ATM அட்டையை ஒப்படைக்கச் சொல்வது





எடுத்துக்காட்டாக, ஒரு மோசடிக்காரர் பாதிக்கப்பட்டவரை ஏமாற்றுவதற்காக, உடனடி ஒப்புதலுடன் கடன் தருவதாக உறுதியளித்து ஒரு போலிக் கடனை வழங்குகிறார்

1. போலியான கடன் கடன் வழங்கப்படுகிறது
2. பாதிக்கப்பட்ட வர் நம்புகிறார்
3. பணம் செலுத்துமாறு கட்டாயம் விதிக்கப்படுகிறது
4. பணம் தொடர்பில்லாத வங்கி கணக்கிற்குப் அனுப்பப்படுகிறது
5. வங்கி கணக்கு பினாமி கணக்கு எனப் பட்டியலிடப்படுகிறது

AMARAN SCAM
Scan, Sekat, Sebar.

1. அனுமதி பெற்ற நிதி நிறுவனங்கள் அல்லது கடன் நிறுவனங்களில் இருந்து மட்டுமே கடன் விண்ணப்பிக்கவும்
2. வங்கி இணையதளங்கள் அதிகாரப்பூர்வமானவையா என்பதை உறுதிசெய்யவும்
3. மூன்றாம் தரப்பினர் பகிரும் சட்டவிரோத இணைய இணைப்புகளைத் திறக்க வேண்டாம்

மலேசிய மத்திய வங்கியால் அனுமதி பெற்ற நிதி நிறுவனங்களின் பட்டியல்: https://www.bnm.gov.my/regulations/fsp-directory

i-KreditKom மூலமாக சமுதாய கடன் நிறுவனங்களை சரிபார்க்கவும்

Google Play, Apple App Store, Huawei AppGallery போன்ற அதிகாரப்பூர்வ தளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்

"எளிய " கடன் தீர்வு முகவர்களை நம்ப வேண்டாம்



சில நிறுவனங்கள் அல்லது நபர்கள் "நடுவராக" நடித்து, கடன்களை எளிதாகவும் விரைவாகவும் தீர்க்க உதவி வழங்குவர்கள்

தந்திரங்கள்:

அழுத்தமும் திணிப்பும்

விளம்பரத்திற்கும் மக்களின் நம்பிக்கையையும் பெறுவதற்கு பிரபலங்கள் மற்றும் பிரமுகர்களைப் பயன்படுத்துதல்

முழுமையான ஆவணங்கள் மற்றும் நிதித் தகுதி இல்லாமல் சேவை வழங்கப்படுவது

சமூக ஊடகம் அல்லது செயலிகள் மூலம் கடன் சலுகை வழங்குதல்



ஏற்கனவே உள்ள கடனைத் தீர்க்கவும் CCRIS இல் கடன் பதிவை நீக்கவும் முன்கூட்டிய கடன் வழங்குவதாக வாக்குறுதி அளிப்பது

சேவை கட்டணங்கள் உட்பட, முந்தைய கடனை அடைக்க தனிநபர் கடன் பெற்றுத்தர உதவுவதாகக் கூறுதல்



குறைந்த ஆபத்து மற்றும் அதிக வருமானம் தரும் முதலீட்டு வாய்ப்பு

AMARAN SCAM
Soal. Sekat. Sebar.

1. தகுந்த கடன் திருப்பிச் செலுத்தும் திட்டங்களைப் பெற சம்பந்தப்பட்ட வங்கி நிறுவனங்களை அணுகுங்கள்

2. கடன் ஆலோசனை மற்றும் மேலாண்மை நிறுவனமான (AKPK) மூலம் இலவச ஆலோசனை மற்றும் கடன் மேலாண்மை சேவையை பெறுங்கள்

3. முதலீடு செய்வதற்கு முன் சரிபார்க்கவும்

குறிப்புக்கான மூலங்கள் :

நிதி நிறுவனங்களின் பட்டியல்:
https://www.bnm.gov.my/regulations/fsp-directory

குறிப்புக்கான மூலங்கள்:

முதலீட்டாளர்களுக்கான எச்சரிக்கைப் பட்டியல்
https://www.sc.com.my/investor-alert-list

நிதி நுகர்வோருக்கான எச்சரிக்கை பட்டியல்
https://www.bnm.gov.my/financial-consumer-alert-list

நிதி மோசடிகளுக்கான எச்சரிக்கை
https://www.bnm.gov.my/financial-fraud-alerts

பினாமி கணக்குகளை சரிபார்க்கும் தளம்
https://semakmule.rmp.gov.my/



வினாடி வினா

நீங்கள் மோசடி தந்திரங்களை அடையாளம் காண்பதைக் கற்றுக்கொண்டீர்களா?

இந்த சவாலில் பங்கேற்கவும்!

AMARAN SCAM
Soal. Sekat. Sebar.

சட்ட அமலாக்க அமைப்புகளின் அதிகார வரம்பு



எச்சரிக்கையுடன் இருங்கள்! நீங்கள் அடுத்த பலியாக இருக்கலாம்!

சந்தேகம் எழுந்தால், கீழ்காணும் சட்ட அமலாக்க அமைப்புகளை அணுகுங்கள்...



மோசடி நடவடிக்கைகள், மோசடியின் வகையைப் பொறுத்து பல்வேறு அதிகார அமைப்புகளின் அதிகார வரம்பிற்குள் வருகின்றன

அமைப்புகள்	அதிகார வரம்பு	தகவல் மூலம்
BANK NEGARA MALAYSIA CENTRAL BANK OF MALAYSIA	• முன்பண வதூல் • வெளிநாட்டு நாணய பரிவர்த்தனை (FOREX)	**அதிகாரப்பூர்வ இணையதளம்:** https://www.bnm.gov.my **நிதி நுகர்வோருக்கான எச்சரிக்கை பட்டியல்** https://www.bnm.gov.my/financial-consumer-alert-list **நிதி மோசடிகளுக்கான எச்சரிக்கை** https://www.bnm.gov.my/financial-fraud-alerts
Suruhanjaya Sekuriti Securities Commission Malaysia	• பங்குகள் / வழிப்பொருள் முதலீட்டு வழங்கல் • அறக்கட்டளை • மின்னியல் உடைமை வர்த்தகம்	**அதிகாரப்பூர்வ இணையதளம்:** https://www.sc.com.my **முதலீட்டாளர்களுக்கான எச்சரிக்கை பட்டியல்** https://www.sc.com.my/investor-alert-list
SSM SURUHANJAYA SYARIKAT MALAYSIA COMPANIES COMMISSION OF MALAYSIA (Agensi di bawah KPDNKK)	• வட்டி அடிப்படையிலான திட்டங்கள் • நிறுவனங்கள் / வணிக பதிவு • கூட்டு சேமிப்பு	**அதிகாரப்பூர்வ இணையதளம்:** https://www.ssm.com.my/Pages/Home.aspx
KEMENTERIAN PERDAGANGAN DALAM NEGERI DAN KOS SARA HIDUP	• கீறி வெல்லும் போட்டிகள் • மின் வணிகம் • பிரமிட் மோசடி	**அதிகாரப்பூர்வ இணையதளம்:** https://www.kpdn.gov.my/en/
POLIS DIRAJA MALAYSIA	• மோசடி குற்ற விசாரணை	**“SemakMule“ இணையதளம்** https://semakmule.rmp.gov.my/
KEMENTERIAN PERUMAHAN DAN KERAJAAN TEMPATAN	• சமுதாய கடன் நிறுவனங்கள்	**அதிகாரப்பூர்வ இணையதளம்:** https://www.kpkt.gov.my

நிதி மோசடிகளுக்கு இரையாகாமல் தவிர்க்க



தன்னை பாதுகாப்பது எப்படி

உங்களைப் பாதுகாத்துக் கொள்ள, தயவுசெய்து பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும்.



அவசியம் பின்பற்ற வேண்டியவை....

- முதலீடு செய்வதற்கு முன் சரிபார்க்கவும்
- வங்கிக் கணக்கின் கடவுச்சொல்லை அடிக்கடி மாற்றவும்
- சந்தேகத்திற்கிடமான செயலிகளை நீக்கவும், வைரஸ் தடுப்பு (antivirus) மென்பொருளை பதிவிறக்கம் செய்யவும்
- அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களோடு மட்டுமே செயல்படுங்கள்
- வங்கியிடம் முறையிட்டு மற்றும் காவல்துறையினரிடம் விசாரணைக்காக புகாரளிக்கவும்

செய்யக் கூடாதவை...

- தெரியாத நபர்களுக்கு உங்கள் வங்கி கணக்கு/ ஏ.டி.எம் அட்டையை வாடகைக்குக் கொடுக்கவோ, ஒப்படைக்கவோ கூடாது
- சரிபார்க்கும் முன் பணத்தைச் செலுத்த வேண்டாம்
- சந்தேகமான இணைய இணைப்புகளைத் திறக்க வேண்டாம்
- தனிப்பட்ட வங்கி விவரங்களைப் பகிர வேண்டாம்
- அதிகாரப்பூர்வமற்ற தளங்களிலிருந்து செயலிகளை பதிவிறக்கம் செய்ய வேண்டாம்

3S முறையைப் பின்பற்றுங்கள்

Spot, Stop and Share ...



கேள்
(Spot)

மோசடியின் அறிகுறிகளைக் கவனியுங்கள். பரிவர்த்தனை முறையானதா என உறுதிப்படுத்த, கேள்வி கேளுங்கள், விசாரியுங்கள் மற்றும் சரிபாருங்கள்

தடு
(Stop)

சந்தேகத்திற்கிடமான அறிகுறிகள் காணப்பட்டால், மோசடியாளருடனான அனைத்து தொடர்புகளையும் உடனடியாக நிறுத்துங்கள். எந்தவொரு வங்கி அல்லது கட்டண விவரங்களையும் பகிர்வதைத் தடுக்கவும்



பகிர்
(Share)

மோசடிகள் குறித்த விழிப்புணர்வை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். மேலும், மோசடிகள் குறித்து உரிய அதிகாரிகளிடம் புகாரிடுவது மற்றவர்களைப் பாதுகாக்க உதவும்.



மோசடியாளர்களால் ஏமாற்றப்படுவதைத் தவிர்க்கவும்


‘Facebook’ இல் ‘Amaran Scam’ பக்கத்தைப் பின்தொடருங்கள்

அண்மைய மோசடி செயல்முறைகள் மற்றும் தடுப்பு அறிவுரைகள் குறித்து Amaran Scam பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்

உடனடியாக புகார் செய்யுங்கள்



நீங்கள் நிதி மோசடிக்குள்ளானவராக இருந்தால்...



நீங்கள் தொடர்ந்து வரும் சூழல்களில் இருந்தால் உடனடியாக உங்கள் வங்கியின் 24 மணி நேர அவசர உதவி எண்

அல்லது

997 என்ற எண்ணில் NSRC-யை தொடர்புகொள்ளுங்கள்...

1. வங்கி கணக்கிலிருந்து உங்களுக்குத் தெரியாமல் பணப்பரிமாற்றம் நிகழ்ந்திருந்தால்

   அல்லது

   ஏமாற்றப்பட்டு பணப்பரிமாற்றம் செய்திருந்தால்

   மற்றும்

2. பணப்பரிமாற்றம் 24 மணி நேரத்திற்குள் நடந்திருந்தால்




காவல்துறையினர் விசாரணையைத் தொடங்க, காவல்துறையில் புகார் பதிவு செய்யுங்கள்

NSRC என்பது என்ன?

தேசிய மோசடி எதிர்வினை மையமான NSRC ஆனது இணையத்தில் நடைபெறும் நிதி மோசடிகளுக்கு எதிராக விரைவான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் செயல்பாட்டு மையம். மேலும், விரைவாகக் திருடப்பட்ட நிதியை கண்டறிதல் மற்றும் குற்றவாளிகளுக்கு உரிய அமலாக்க நடவடிக்கைகளை உள்ளடக்கியது.

997

தினமும் 24 மணி நேரமும்



- தேசிய நிதி குற்றத்தடுப்பு மையம் (NFCC)
- மலேசிய அரச காவல் (PDRM)
- மலேசிய மத்திய வங்கி) (BNM)
- மலேசிய தகவல்தொடர்பு மற்றும் பன்மாதியம் ஆணையம் (MCMC)

மேலும் **நிதி நிறுவனங்கள்** மற்றும் **தொலைத்தொடர்பு துறை**


AMARAN
SCAM
Soal. Sekat. Sebar.